# திருக்குறள் மற்றும் இஸ்லாத்தின் பார்வையில் வாழ்க்கைத் துணைநலம் -ஓர் ஒப்பியல் ஆய்வு

ALM Mujahid,

*Department of Islamic Studies, Eastern University,*

*Sri Lanka.*

**ஆய்வுச் சுருக்கம்**

*ஆண், பெண் இருபாலாரும் தமது வாழ்க்கைத் துணையை சரியாகத் தெரிவு செய்து கொள்வதில்தான் இல்லற வாழ்வின் வெற்றியும், மகிழ்ச்சியும் தங்கியுள்ளது. திருமணத்திற்கான அவர்களது தெரிவில் தவறுகள் விடப்படுகின்றபோது அது அவர்களது வாழ்வில் பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்திவிடக்கூடும். மனவாழ்வில் புரிந்துணர்வின்மை ஏற்பட்டு விவாரத்து கூட ஏற்படலாம். எனினும் தம்பதியர் இருவரும் தத்தமது கடமைகளை உணர்ந்து சரிவர நிறைவேற்றும் போது அவர்களது குடும்ப வாழ்வு செழிக்கவும் , சிறந்த சந்ததிகள் உருவாகவும் வழி ஏற்படுகின்றது. எனவே ஒரு ஆண் தனக்குரிய துணையைத் தெரிவு செய்யும் போது மகிழ்ச்சியான , இல்வாழ்க்கைக்குப் பொருத்தமான பண்புகளைத் தன்னகத்தே கொண்ட பெண்ணைத் தெரிவு செய்து கொள்ள வேண்டும் என மதவழிகாட்டல்கள் மூலம் அறிவுறுத்தப்படுகின்றான். ஓர் ஆணோ, பெண்ணோ தனக்குரிய துணையைத் தெரிவு செய்யும் போது நடைமுறையில் கவனத்திற் கொள்ளும் பல அம்சங்கள் காணப்படுகின்றன. அவை பணம் , பதவி, குலம், கோத்திரம், அழகு போன்,றவைகளாகும். ஒரு நல்ல மனைவிக்குரிய இலக்கணம் , பண்புகளை பல இலக்கியங்கள் எடுத்தியம்பினாலும் திருக்குறள் மற்றும் இஸ்லாத்தினுடைய வழிகாட்டல்களை ஆராயுமிடத்து அவைகளில் பல ஒற்றுமைத்தன்மைகளை அவதானிக்கலாம். ஒரு நல்ல மனைவி எத்தகைய குணவியல்புகளை அணிகலன்களாகக் கொண்டிருக்க வேண்டும் என திருக்குறள் மற்றும் இஸ்லாத்தின் வழிகாட்டல்களிலுள்ள ஒற்றுமையை வெளிக்கொணர்வதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். இவ்வாய்வுக்காக திருக்குறளும் அல்குர்ஆன் மற்றும் ஹதீஸ்களும் முதன்மைத் தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதோடு விவரணப்பகுப்பாய்வு முறை பிரயோகப்படுத்தப்பட்டுள்ளது. ஒப்பியல் நோக்கில் திருக்குறள் மற்றும் அல்குர்ஆனை ஆய்வு செய்பவர்களுக்கும் மனைவியின் அணிகலன்களை அறிந்து கொள்ள எத்தணிப்பவர்களுக்கும் சமயப் போதனைகளுக்கு அமைவாக திருமணத்திற்காக எவ்வாறான பெண்ணைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என முயற்சிப்பவர்களுக்கும் இவ்வாய்வு வழிகாட்டியாக அமையும்.*

**திறவுச் சொற்கள்** : திருக்குறள், வாழ்க்கைத்துணைநலம், இஸ்லாம், மனைமாட்சி, ஒப்பியல் ஆய்வு

**அறிமுகம்**

தமிழ் இலக்கிய வரலாற்றில் தனித்துவம் பெற்ற நூலாகத் திகழும் திருக்குறள் பல்வேறு தரப்பினரின் வரவேற்பைப் பெற்று அனைத்து இன , மத மக்களையும் நல்வழிப்படுத்தி செம்மைப்படுத்தும் உலகப் பொதுமறையாகத் திகழ்வது போல் அல்குர்ஆனும் உலக மக்கள் அனைவருக்கும் பொதுவானதாகவே தன்னை அடையாளப்படுத்துகின்றது. இவ்விரு பெரும் வழிகாட்டல் பொக்கிஷங்களும் மனிதர்களுக்கு நன்மை பயக்கக் கூடிய போதனைகளையே முன்வைக்கின்றன. அப்போதனைகளின் போக்குகளில் இவ்விரண்டிற்குமிடையே அதிக ஒற்றுமைகளை அவதானிக்கலாம். குடும்ப வாழ்க்கையில் ஒரு மனைவியின் செயற்பாடுகள் கணவனுக்கும் குடும்பத்திற்கும் புகழ் சேர்ப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றன. ஒரு மனைவி எவ்வாறான இலக்கணங்கள் பொருந்தியவளாக இருக்க வேண்டும் என்ற வரையறைகளிலும் இவ்விரண்டினதும் போதனைகளில் பல ஒற்றுமைத்தன்மைகள் புலப்படுகின்றன.

கணவனுக்கு மனைவி துணையும் மனைவிக்கு கணவன் துணையும் என்னும் ஒப்புரிமைப்பட்டதே வாழ்க்கைத்துணைநலம். எனினும் இல்லத்தரசியாய் குடும்பத்தை ஆட்சி செய்பவள் இல்லாளே எனும் அடிப்படையில் இல்வாழ்க்கை பொலிவு பெறத் துணை நிற்பவள் மனைவியேயாவாள். அவளால் இல்லமும் கணவனும் பெறும் நலமும்

இல்லாலாகிய வாழ்க்கைத் துணையினால் இல் வாழ்க்கைக்கு கிடைக்கும் நன்மைகளையும் சொல்வதே வாழ்க்கைத் துணைநலம் எனப்படுகின்றது. மனைவியைத் தெரிவு செய்வதில் நற்குணம் , நன்நடத்தை, கற்பைப்பேணல், அன்பு, அரவணைப்பு, கணவனைத் திருப்திப்படுத்தல், பொறுப்புணர்ச்சி போன்றவற்றிற்கு முக்கியத்துவமும் முன்னுரிமையும் கொடுக்குமாறு திருக்குறள் குறிப்பிடுவது போல் இஸ்லாமும் அதே வழிகாட்டல்களை வழங்குகின்றது.

ஒரு குடும்பத்தினுடைய முக்கிய பாத்திரத்தை மனைவி பெற்றிருப்பதால் அவளது குணவியல்புகள் , நடத்தைகள் அக்குடும்பத்தில் பாரிய தாக்கம் செலுத்தவல்லன. எனவே அவளது வகிபங்கினூடாக அக்குடும்பத்தை நல்ல பாதையில் இட்டுச் செல்வதற்கு அவள் ஒரு நல்ல மனைவிக்குரிய தகுதிகளைப் பெற்றிருப்பது அவசியமாகும். திருக்குறளின் அறத்துப்பாலில் வாழ்க்கைத்துணைநலம் எனும் 6ம் அதிகாரத்திலும் அல்குர்ஆன் மற்றும் ஹதீஸ்களிலும் மனைமாட்சி தொடர்பான வழிகாட்டல்கள் போதிக்கப்பட்டுள்ளன. உலகம் போற்றத்தக்க , குடும்பத்தை சிறப்பாக நகர்த்திச் செல்லத்தக்க ஒரு பெண்ணாக தன்னை வளப்படுத்திக் கொள்ள விரும்பும் பெண்களுக்குத் தேவையான போதனைகளையும் வழிகாட்டல்களையும் இஸ்லாமும் திருக்குறளும் மிகவும் தெளிவாகக் குறிப்பிட்டு வழிகாட்டி நிற்கின்றன.

**வாழ்க்கைத்துணைநலம் பற்றிய போதனைகள்**

<u>நல்லொழுக்கமான பெண்</u>

ஓர் ஆண் தனக்குரிய துணையைத் தெரிவு செய்யும் போது அப்பெண் எப்படி இருக்க வேண்டும் என முதன்மைப்படுத்திக் கூறப்படுகின்ற விடயம் நல்லொழுக்கமாகும். ஒழுக்கமுடைய ஒரு பெண் ஒருவனுக்கு மனைவியாகக் கிடைக்குமிடத்து அதைவிடச் சிறந்தது அந்தக் கணவனுக்கு இவ்வுலகில் எதுவுமில்லை என திருக்குறளும் இஸ்லாமும் பின்வருமாறு விபரிக்கின்றன.

**மனைக்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்**

**வளத்தக்காள் வாழ்க்கைத் துணை. (திருக்குறள் : 51)**

இல் வாழ்க்கைக்கு துணை ஆகிய இல்லாளது நன்மையும் அதிகார முறைமையும் இக்குறளில் கூறப்படுகின்றது. மனையறத்திற்குத் தக்க நற்குண நற்செய்கைகளை உடையவளாய்த் தன்னைக் கொண்டவனது வருவாய்க்குத் தக்க வாழ்க்கையை உடையாள் அதற்குத் துணை. நற்குணங்களாக இங்கு சுட்டப் பெறுவன துறந்தார்ப் பேணலும் விருந்து அயர்தலும் வறியார் மாட்டு அருளுடைமையும் முதலாயின. நற்செய்களாவன வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்களை அறிந்து கடைப்பிடித்தலும் அட்டில் தொழில்வன்மையும் ஒப்புரவு செய்தலும் முதலாயின. வருவாய்க்குத் தக்க வாழ்க்கையாவது முதலை அறிந்து அதற்கு இயைய அழித்தல். இதனால் இந்நன்மைகள் சிறந்தன என்பது கூறப்படுகின்றது.

**மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை**

**எனைமாட்சித் தாயினும் இல். (திருக்குறள் : 52)**

மனையறத்திற்கு தக்க நற்குண நற்செய்கைகள் ஒருவன் இல்லாளிடத்து இல்லையாயின் அவ்வில்வாழ்க்கை செல்வத்தால் எத்துணை மாட்சி உடையதாயினும் அஃது உடைத்தன்று அதாவது பயன்படாமை உடையதாகும்.

**இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்**

**இல்லவள் மாணாக் கடை?. (திருக்குறள் :53)**

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*

ஒருவனுக்கு இல்லாள் நற்குண நற்செய்கையாள் ஆயினக்கால் இல்லாதது யாது ? அவள் அன்னள் அல்லாக்காய் உள்ளது யாது? ஆக இல்வாழ்க்கைக்கு வேண்டுவது இல்லாளது மாட்சியயே, பிற அல்ல என்பது கூறப்பட்டுள்ளது.

இவ்வதிகாரத்தின் முதல் மூன்று குரள்களும் மனைவிக்குரிய மாண்புகளை மிக அழகாக முன்வைக்கின்றன. மனைவினுடைய இப்பண்புகளால் கணனுக்கு மனைவி மீதான நம்பிக்கையும் புரிந்துணர்வும் மகிழ்ச்சியும் முழுமையாக ஏற்படுவதற்கு துணை செய்கின்றன. இவ்வாறு திருக்குறள் முன்வைக்கும் இதே பண்புகளை ஒரு மனைவி தன்னகத்தே கொண்டிருப்பதனால் அவள் எவ்வளவு முக்கியத்துவப்படுத்தப்படுகின்றாள் என்ற அம்சங்களை இஸ்லாம் பின்வருமாறு எடுத்தியம்புகின்றது.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ ஹுறைறா (றழி) அறிவிக்கிறார்கள் : நான்கு நோக்கங்களுக்காக ஒரு பெண் மணமுடிக்கப்படுகிறாள் :

1. அவளுடைய செல்வத்திற்காக
2. அவளுடைய குடும்பப் பாரம்பரியத்திற்காக.
3. அவளுடைய அழகிற்காக
4. அவளுடைய மார்க்க நல்லொழுக்கத்திற்காக.

எனவே, நல்லொழுக்கம் உடையவளை மணந்து வெற்றி அடைந்து கொள்!

**(புகாரி, இஸ்மாயீல். 1999, எண் *5090*)**

ஒழுக்கமுள்ள பெண்ணை ஒரு ஆண் தேர்ந்தெடுக்கும்போது அவள் தன்னை முழுமையாகக் காத்து கணவனுக்கு நம்பிக்கையோடும் பொறுப்புணர்வோடும் நடந்து கொள்வாள். சிறந்த மனைவி அமைவதே ஒரு மனிதன் பெறும் மிகப்பெரிய பேறாகும். நபியவர்கள் கூறியதாக ஸஃது பின் அபீவக்காஸ் (றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: 'நான்கு விடயங்கள் மகிழ்ச்சியைக் கொண்டு வரக்கூடியது: அவை நல்ல மனைவி , போதுமான இருப்பிடம் , நல்ல அண்டை வீட்டான், நல்ல வாகனம் என்பனவையாகும்.

**(இப்னு ஹிப்பான் :4094, ஸுனன் பைஹகீ 9021)**

அப்துல்லாஹ் இப்னு அம்ரிம்னு ஆஸ் (றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: "உலகம் ஒரு செல்வமாகும். அந்த செல்வங்கள் அனைத்திலும் சிறந்தது நல்லொழுக்கமும் நற்பண்பும் மிக்க நல்ல பெண்மணியாவாள்"

**(அல்ஹஜ்ஜாஜ், முஸ்லிம், 2004, எண் *2911*)**

இங்கு கூறப்பட்டுள்ள இஸ்லாத்தினுடைய போதனைகளை ஆராயுமிடத்து உலகில் காணப்படுகின்ற எல்லா செல்வங்களையும் விட ஒரு பெண்ணுக்கு நல்லொழுக்கமே மிக்க மேலான செல்வமாக சிலாகித்துக் கூறப்படுகின்றது. இவ்வாறு ஒழுக்கம் பேணி நடக்கின்ற ஒரு பெண் ஒரு ஆணுக்குக் கிடைக்குமேயானால் அதுவே இவ்வவுலகில் கிடைக்கும் மிகப்பெரிய பாக்கியமும் செல்வமுமாகும்.

நல்லொழுக்கம் உள்ள பெண்ணே குடும்ப வாழ்வில் ஒரு சிறந்த மனைவியாகத் திகழ முடியும் என்ற கருத்தை திருக்குறளும் இஸ்லாமும் போதிக்கும் விதத்தில்பல ஒற்றுமைகள் புலப்படுகின்றன.

***கற்பைப் பேணும் பெண்***

*இந்து, இஸ்லாமியப் பண்பாடுகளில் கற்பு என்பது ஒரு உன்னதமான விடயமாகப் பார்க்கப்படுகின்றது. பெண்ணிடத்தில் கற்பு என்று சொல்லப்படுகின்ற கலங்காத நிலை காணப்படுமாயின் ஒருவன் அடையக்கூடிய மேலான பொருள் வேறு ஏதும் இல்லை என்று பல்வேறு காப்பியங்களிலும் குறிப்பிடப்படுகின்றன. இராமாயணத்தில் சீதை , சிலப்பதிகாரத்தில் கண்ணகி போன்றோர் கற்புக்கரசிகளாக சிலாகித்துக் கூறப்பட்டிருப்பதை இங்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். இவ்விடயம் தொடர்பில் திருக்குறள் மற்றும் இஸ்லாத்தினுடைய கருத்துக்கள் பின்வருமாறு அமைகின்றன.*

***பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்***

***திண்மைஉண் டாகப் பெறின்.*** ***(திருக்குறள் :* 54)**

*ஒருவர் எய்தும் பொருள்களுள் இல்லாளின் மேம்பட்ட பொருள்களுள் யாவை உள , அவளிடம் கற்பு எனும் கலங்கா நிலைமை உண்டாகப் பெறின். கற்புடையவள் போல அறம் , பொருள், இன்பம் எதுவும் நிகரின்மையும் கற்பு நலத்தின் சிறப்பும் குறிப்பிடப்படுகின்றது.*

***தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற***

***சொற்காத்துச் சோர்விலாள் பெண். (திருக்குறள் :*** **56)**

*கற்பினின்று வழுவாமல் தன்னைக் காத்துத் தன்னைக் கொண்டவனையும் உண்டி முதலியவற்றால் பேணி இருவரிடமும் நன்மை அமைந்த புகழ் நீங்காமல் காத்து நற்குண நற்செய்கைகளிலும் கடைப்பிடிப்பவளே பெண் ஆவாள். ஆயின் பெண்ணின் புகழாவது வாழும் ஊர் கற்பால் தன்னைப் புகழ்வது என்பதாக கற்புடையாளின் சிறப்பு அமையப் பெற்றுள்ளது.*

*இவ்வாறு திருக்குறள் கற்பைப் பேணும் பெண்ணுடைய சிறப்புக்களைப் போற்றுகின்றது.*

*நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அறிந்து கொள்ளுங்கள் நீங்கள் உங்கள் மனைவிமார்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளும் உள்ளன. அவர்கள் உங்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளும் உள்ளன. உங்கள் மனைவிமார்கள் உங்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளாகிறது உங்கள் படுக்கையறைகளில் வேறு எவருக்கும் இடம் கொடுக்காமல் இருப்பதும் நீங்கள் வெறுப்பவர்களை உங்கள் வீடுகளுக்குள் அனுமதிக்காமல் இருப்பதும் ஆகும். நீங்கள் அவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமையாகிறது அவர்களுக்கு அழகிய முறையில் ஆடையளிப்பதும் உணவளிப்பதும் ஆகும். (ஈஸா, முஹம்மது.* 2012,எண்1083**)**

*ஆண்களைக் கவரும் வண்ணம் அலங்காரங்களை அந்நியர்களுக்கு வெளிப்படுத்தக் கூடாது. தன் அலங்காரங்களை கணவனுக்கு மட்டுமே காட்டும் வண்ணம் அமைத்துக் கொள்ள வேண்டும்.*

*தமது பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ளுமாறும் தமது கற்புகளைப் பேணிக் கொள்ளுமாறும் நம்பிக்கை கொண்ட பெண்களுக்குக் கூறுவீராக! அவர்கள் தமது அலங்காரத்தில் வெளியே தெரிபவை தவிர மற்றவற்றை வெளிப்படுத்த வேண்டாம். தமது முக்காடுகளை மார்பின் மேல் போட்டுக் கொள்ளட்டும். தமது கணவர்கள் , தமது தந்தையர் , தமது கணவர்களுடைய தந்தையர் , தமது புதல்வர்கள் , தமது கணவர்களின் புதல்வர்கள் , தமது சகோதரர்கள் , தமது சகோதரர்களின் புதல்வர்கள் , தமது சகோதரிகளின் புதல்வர்கள் , பெண்கள், தங்களுக்குச் சொந்தமான அடிமைகள் , ஆண்களில் (தள்ளாத வயதின் காரணமாக பெண்கள் மீது) நாட்டமில்லாத பணியாளர்கள், பெண்களின் மறைவிடங்களை அறிந்து கொள்ளாத குழந்தைகள் தவிர மற்றவர்களிடம் தமது அலங்காரத்தை அவர்கள் வெளிப்படுத்த வேண்டாம்.*

***இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு***

*அவர்கள் மறைத்திருக்கும் அலங்காரம் அறியப்பட வேண்டுமென்பதற்காக தமது கால்களால் அடித்து நடக்க வேண்டாம். நம்பிக்கை கொண்டோரே! அனைவரும் அல்லாஹ்வை நோக்கித் திரும்புங்கள்! இதனால் வெற்றியடைவீர்கள்.*

**(*அல்குர்ஆன்* 24:31)**

*நபியே! உமது மனைவியருக்கும் , உமது புதல்வியருக்கும் , (ஏனைய) நம்பிக்கை கொண்ட பெண்களுக்கும் முக்காடுகளைத் தொங்கவிடுமாறு கூறுவீராக! அவர்கள் (ஒழுக்கமுடைய பெண்கள் என்று) அறியப்படவும் , தொல்லைப்படுத்தப்படாமல் இருக்கவும் இது ஏற்றது' அல்லாஹ் மன்னிப்பவனாகவும், நிகரற்ற அன்புடையோனாகவும் இருக்கிறான்.* **(*அல்குர்ஆன்* 33:59)**

*எனவே, இவ்விரு போதனைகளிலும் கற்பைப் பேணுவதன் அவசியம் வலியுறுத்தப்படுவது மாத்திரமன்றி கற்பைப் பேணுவதனால் ஒரு பெண் அடைகின்ற சிறப்பும் ஆண் பெறுகின்ற விலைமதிக்க முடியாத வெகுமதியும் விபரிக்கப்பட்டுள்ளது.*

***<u>கணவன் திருப்தி கொள்ளும் பெண்</u>***

*ஒரு சிறப்பான மனைவியின் இலக்கணத்தில் அடுத்ததாகச் சொல்லப்படும் விடயம் கணவனுக்குக் கட்டுப்பட்டு அவனது கடமைகளை சரிவர நிறைவேற்றி அவனது பூரண திருப்தியைப் பெறும் பண்பாகும். இதனை திருக்குறளும் இஸ்லாமும் ஒரு புகழத்தக்க மனைவிக்குரிய பண்பாக பின்வருமாறு எடுத்துரைக்கின்றன.*

**பெற்றாற் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்**

**புத்தேளிர் வாழும் உலகு. (*திருக்குறள் :* 58)**

*பெண்டிர் தம்மை எய்திய கணவனை வழிபடுதல் பெறுவாராயின் புத்தேளிர் வாழும் உலகின் கண் அவரால் பெருஞ்சிறப்பினைப் பெறுவர்.*

*நபி (ஸல்) அவர்கள்; சிறந்த, நல்ல பெண்ணுக்கு பின்வருமாறு வரைவிலக்கணம் சொன்னார்கள். 'நீ அவளைப் பார்த்தால் உன்னை மகிழ்விப்பாள். நீ அவளுக்கு கட்டளையிட்டால் உடன் கட்டுப்படுவாள். நீ அவளை வைத்து சத்தியம் செய்தால் அதனை நிறைவேற்றி வைப்பாள். நீ வீட்டில் இல்லாத போது தன்னையும் உன் பொருளையும் பாதுகாத்துக் கொள்வாள்.'*

**(*ஸுனன் நஸாயீ :* 8690)**

*மனிதன் மனிதனுக்கு ஸஜ்தா (சிரம்பணிய) முடியுமென்றிருந்தால் கணவனுக்கு சிரம்படியும்படி மனைவிக்கு நான் கட்டளையிட்டிருப்பேன். (திர்மிதி)*

*நான் நபி (ஸல்) அவர்களிடம் அல்லாஹ்வின் தூதரே ஒரு பெண் மனிதர்களில் யாருக்கு அதிகம் கடமைப்பட்டிருக்கிறாள்? எனக்கேட்டேன். அதற்கு நபியவர்கள் அவளுடைய கணவனுக்கு என்று கூறியதாக ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள*

**(*ஹாகிம் :*7244)**

*'ஒரு பெண் ஐவேளைத் தொழுகைகளையும் , ரமழான் மாத நோன்பையும் நிறைவேற்றி , தமது கற்பையும் பாதுகாத்து , கணவனுக்கும் கட்டுப்பட்டு நடந்தால், அவள் சொர்க்கத்தில் தான் நாடிய எந்தவாயில் வழியாகவும் நுழையலாம் என நபி (ஸல்) கூறினார்கள்'.* ***(நூல்: அஹ்மது)***

*கணவன் தன் மனைவி மீது திருப்தி கொள்வானாயின் முரண்பாடுகளும் குடும்பப் பிணக்குகளும் ஏற்படாமல் சந்தோஷமான குடும்ப சூழல் உருவாக்கப்படும். கணவன் பொருந்திக்கொள்ளக்கூடிய விதமாக ஒரு பெண் தன்னை ஆக்கிக்கொள்வதனால் அவள் அடைகின்ற பயன் , உளத்திருப்தி, அவளுக்கான வெகுமதி போன்றன இங்கு தெளிவுபடுத்தப்படுகின்றன.*

***<u>நல்ல சந்ததியை உருவாக்கும் பெண்</u>***

*சந்ததியை விருத்தி செய்தல் திருமணவாழ்வின் முக்கிய நோக்கங்களுள் ஒன்றாகும். எனவே ஒருவர் தனக்குரிய துணையைத் தெரிவு செய்கின்ற போது நல்ல சந்ததிகளை உருவாக்கக்கூடிய பெண்ணைத் தெரிவு செய்ய வேண்டும் என்பதும் பரிந்துரைக்கப்படுகின்ற ஒரு விடயமாகும்.*

***மங்கலம் என்ப மனைமாட்சி மற்று அதன்***
***நன்கலம் நன்மக்கட் பேறு. (திருக்குறள் : 60)***

*ஒருவருக்கு நன்மை என்று சொல்லுவர் அறிந்தோர் , மனையானது நற்செய்கைகளை, அவை தமக்கு நல்ல அணிகலன் என்று சொல்லுவர் நல்ல புதல்வரைப் பெறுதலை ஆயின் ஒருவனுக்கு அழகென்பது மனையாள் ஒழுக்கமுடையாள் ஆதலாகும். அவ்வழகின் மேல் நல்ல அணிகலன் என்று சொல்லுவது நல்ல புதல்வரைப் பெறுவதாகும்.*

*நல்ல மக்களே தலைமுறை தொடர்வதற்கான இணைப்பாகி , மனித குலம் தொடர்ந்து உயிர்ப்புடன் இயங்கிக் கொண்டிருக்கவும் அதை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லவும் காரணமாகின்றனர். இதன் மூலம் சிறந்த நற்பண்புகள் மற்றொரு சந்ததிக்குக் கடத்தப்படுகின்றன.*

*'அதிக அன்பும் குழந்தைப் பேறும் கொண்ட பெண்களை மணமுடிப்பீர்களாக. மறுமையில் நான் ஏனைய சமூகங்களுக்கு முன்னால் உங்களது எண்ணிக்கையை வைத்து பெருமைப்படுவேன்.'*

***(ஸுனன் அபூதாவூத் :2050, முஸ்தத்ரக் அல் ஹாகிம் : 2685)***

*இவ்வாறு தனது குடும்பத்தின் பாரிய பொறுப்பை தனதாக்கிக் கொண்ட ஒரு மனைவி அடுத்த சந்ததியாக நல்ல வாரிசுகளை விட்டுச் செல்லக்கூடியவளாக இருக்க வேண்டும் என இங்கு பரிந்துரைக்கப்படுகின்றது. அத்தகைய பெண்ணை பூரணத்துவமனவளாகவும் புகழத்தக்கவளாகவும் திருக்குறளும் இஸ்லாமும் சிறப்பித்துக் கூறுகின்றன.*

***முடிவுரை***

*உலகப்பொதுமறையாக பல்வேறு சமூகத்தவர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட திருக்குறள் மற்றும் இஸ்லாத்தினுடைய அடிப்படை மூலாதாரங்களான அல்குர்ஆன் , ஹதீஸ் ஆகியன போதிக்கும் மனைமாட்சி இங்கு ஒப்பியல் அணுகுமுறையில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு அவைகளின் போதனைகளில் வெளிப்படும் ஒற்றுமைக் கருத்துக்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளன. இவ்விரு போதனைகளிலும் கூறப்பட்டுள்ளவாறு மனைவி மாட்சிமை உடையவளாக இருக்க வேண்டும். மனைவி ஆற்ற வேண்டிய கடமைகள் பொறுப்புக்கள் குணம் நிறைந்த பெண்ணை அடைந்த*

*கணவனது பேறாகும். குடும்பம் பொலிவாதல் , நல்ல மக்களைப் பெற்று அதற்கு மேலும் அழகு சேர்த்தல் என்பவற்றிற்கமைய ஒரு மனையிவின் குணவியல்புகள் , நடத்தைக் கோலங்கள் அமையுமிடத்து குடும்ப வாழ்வில் திருப்தியும், மகிழ்ச்சியும் நிறைந்து காணப்படும். மக்களை நல்வழிப்படுத்துவதற்கான போதனைகளை உள்ளடக்கியிருக்கின்ற இவ்விரு வழிகாட்டல் பொக்கிஷங்களும் குடும்பத்தின் அத்திபாரமாகச் செயற்படும் இல்லாளின் வகிபங்கை செம்மைப்படுத்தும் போது குடும்ப உறுப்பினர்களின் நடவடிக்கைகளின் வெளிப்பாடுகள் செயற்திறன்மிக்கவையாக அமையும் என்பதனால் ஒரு சிறந்த குடும்பத் தலைவியை உருவாக்குவதில் கவனம் செலுத்தியுள்ளன. மனைமாட்சி தொடர்பான அவைகளின் உள்ளடக்கங்களை ஆராயும் போது இவை மிகவும் தெளிவாகப் புலப்படுகின்றன. இலக்கியங்களிலும் சமயங்களிலும் பொதிந்துள்ள நீதிக்கருத்துக்கள் ஆய்வாளர்களால் ஆராயப்பட்டு இது போன்ற பல்வேறு தலைப்புக்களிலும் பல ஆய்வுகள் முன்னெடுக்கப்படவேண்டும் என இவ்வாய்வு பரிந்துரை செய்கின்றது.*

**உசாத்துணைகள்**

[1] *அல்ஹஜ்ஜாஜ், முஸ்லிம். (*2004). *ஸஹீஹ் முஸ்லிம். (மொ.பெ), சென்னை, றஹ்மத் பதிப்பகம்.*

[2] *ஈஸா, முஹம்மது. (*2012). *ஜாமிஉத் திர்மிதி. (மொ.பெ), சென்னை, றஹ்மத் பதிப்பகம்.*

[3] *புகாரி, இஸ்மாயீல். (*1999). *ஸஹீஹுல் புகாரி. ஐந்தாம் பாகம்*, (*மொ.பெ), சென்னை, றஹ்மத் பதிப்பகம்.*